**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,</u>**

**<u>திருவண்ணாமலை மாவட்டம்.</u>**

**<u>அசல் வழக்கு எண்.54/16</u>**

2023-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 04-ம் நாள் வாதி/பிரதிவாதி சாட்சியாகிய, திருமதி.சாந்தி, என்பவரின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 54-வது விதியின் 9-வது பிரிவின்படி திரு. எஸ்.விஜி, உதவியாளர் என்பவரால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | - திருமதி.சாந்தி, |
| வயது | - |
| தந்தை/கணவர் பெயர் | - க.பெ.திருஞானம் |
| கிராமம் | - அழிவிடைதாங்கி |
| வட்டம் | - |
| சாதி | - |
| சமயம் | - |
| தொழில் | - |

<u>04.11.2023</u>

**<u>பி.வா.சா.2.</u>**

நான் இவ்வழக்கில் 4ம் பிரதிவாதியாவேன். என்னிடம் காட்டப்படும் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை எனக்கு படித்து காண்பித்தார்கள். நான் அதில் கை நாட்டு வைத்தேன். தாவா பி-அட்டவணை சொத்து குறித்த கிரைய பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். **(07.09.2009 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** தாவா பி-அட்டவணை சொத்து குறித்த வில்லங்க சான்றுகள் தாக்கல் செய்துள்ளேன். ( **01.01.2005 முதல் 21.09.2023 வரையிலான வில்லங்க சான்று கணினி நகல் பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) (**01.01.2003 முதல் 24.09.2023 வரையிலான வில்லங்க சான்று கணினி நகல் பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) தாவா எ-அட்டவணை குறித்த வில்லங்க சான்று தாக்கல் செய்துள்ளேன். (**12.08.1982 முதல் 31.05.2003 வரையிலான வில்லங்க சான்று கணினி நகல் பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) என்னுடைய பிரமாணத்தை ஏற்று தாவாவை செலவுத்தொகையுடன் தள்ளபடி செய்யுமாறு பிரார்த்திக்கிறேன்.

பிரதிவாதிகள் 11, 12 தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளின்பேரிலும் வாதி தரப்பு கற்றறிந்த வழக்கிறஞரின் வேண்டுகோளின்பேரிலும் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.